**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

**No.5. KavignarPuduvaiSivam St**
**Venkata Nagar Extension**
**Pondicherry 605 011 INDIA**
Ph: off: (413) 2213758, 2212443, 2211592
Mobile : 94432 21770
Res: (413) 2211710, 2212778
Fax: (413) 2212338
e-mail:ashokmirra@gmail.com;motherssindia@gmail.com

*The Mother's Service Society*

**30.6.11**

## Infinity - யினுடைய ஆற்றல்-(பாகம்-1)

**Infinity** என்ற கருத்து நம்முடைய வாழ்க்கையில் பல இடங்களில் சம்பந்தப்படக்கூடிய ஒரு கருத்தாகும். ஆன்மீகத்திலும், தத்துவத்திலும் மற்றும் விஞ்ஞானம், கணிதம் என்ற பல துறைகளில் **Infinity** என்ற இந்த கருத்து பயன்படுகிறது. இதை வெறும் தியரிட்டிக்கல் கருத்தாக விஞ்ஞானத்திலும், தத்துவத்திலும் பயன்படுத்திக் கொண்டிருந்தால் அது நம் நடைமுறை வாழ்க்கைக்கு உதவாது. நம் நடைமுறை வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கும், நம்முடைய சாதிக்கும் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் இந்த **Infinity** என்ற கருத்தை எப்படி பயன்படுத்திக கொள்ளலாம் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**Infinity**-ஐ நம் நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வருவதற்கு பகவானும், அன்னையும் வகுத்துக் கொடுத்த பூரண யோக நெறி முறைகள் மிகவும் உதவியாக இருக்கும். முதலில் **Infinity** என்றால் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். **Infinity** என்றால் வரம்போ, முடிவோ இல்லாத நிலையை குறிக்கிறது. அதாவது ஒரு ஆரம்பமோ, முடிவோ இல்லாத நிலையை **infinite condition** என்கிறோம். இந்த **Infinity** காலத்திற்கும் பொருந்தும், இடத்திற்கும் பொருந்தும். உதாரணமாக பிரபஞ்சத்தை அளவில் **Infinite** என்று விஞ்ஞானம் வர்ணிக்கிறது. அதாவது பிரபஞ்சம் இங்கே தான் துவங்குகிறது. இங்கே தான் முடிகிறது என்று நாம் ஒரு ஆரம்பத்தையோ, முடிவையோ காட்ட முடியாது. எவ்வளவு பெரிய **telescope**-ஐ வைத்துப் பார்த்தாலும் அது விரிந்து கொண்டே போகிறது. முடிவே தெரியவில்லை என்று தான் விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். இட அளவில் பிரபஞ்சம் **infinite** ஆக இருப்பது போல் கால அளவிலும் அதற்கு ஒரு ஆரம்பமோ, முடிவோ கிடையாது. அதாவது பிரபஞ்சம் இந்த கால கட்டத்தில் தான் துவங்கியது என்றோ, இந்த கால கட்டத்தில் தான் பிரபஞ்சத்தின் ஆயுள் முடிகிறது என்றோ நாம் எதையுமே குறிப்பிட்டுக் காட்ட முடியாது. ஆனால் நம்முடைய வாழ்க்கையில் மற்ற எல்லாவற்றையும் பார்த்தால் இடம் மற்றும் வடிவ ரீதியாகவும் சரி, கால ரீதியாகவும் சரி எல்லாவற்றிற்கும் வரையறைகள் உண்டு. ஆரம்பமும் முடிவும் உண்டு. உதாரணமாக பூமி நமக்கு பிரம்மாண்டமாக தெரிகிறது. ஆனால் அதனுடைய சுற்றளவிற்கு ஒரு **limit** உண்டு. அதாவது 24091 மைல் 38545 **k.m.** இவ்வளவு தான் பூமியினுடைய சுற்றளவு என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அம்மாதிரியே பூமியினுடைய வயதை 4540 கோடி வருடங்கள் என்று கணக்கிட்டு உள்ளார்கள். கடல் நம் பார்வைக்கு பிரம்மாண்டமாக தெரிந்தாலும் அதற்கும் ஒரு எல்லையும் அளவும் உண்டு. கவிஞர்கள் இமயமலை போன்ற மலைகளை வானளாவிய உயர்ந்த மலைகள் என்று வர்ணிப்பதுண்டு. ஆனால் இமயமலையின் உச்சிக்கும் ஒரு வரம்பு உண்டு. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை 27,000 அடி என்று கணக்கிட்டுள்ளார்கள். இம்மாதிரியே உலகத்தில் வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் அதாவது செடிகொடிகள் மரங்கள் பிராணிகள் மற்றும் மனிதன் உட்பட முடிவில்லா ஆயுள் எதற்கும், எவர்க்கும் கிடையாது. பெரும்பாலானவர்களுடைய ஆயுள் 100 வயது எட்டுவதற்குள்ளேயே முடிந்து விடுகிறது. 100-ஐ தாண்டிப் போகின்றவர்கள் குறைவு.

**Infinity** என்பது வரம்பற்ற ஒரு நிலை என்பதை நாம் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அதனுடைய அடுத்த சிறப்பம்சமாக **Infinity**-யின் குணாதிசயங்களை உணர்ந்த மேதைகள், என்ன சொல்கிறார்கள் என்றால் நாம் கூட்டினாலும் சரி, கழித்தாலும் சரி, பெருக்கினாலும் சரி, வகுத்தாலும் சரி, **infinite** ஆக இருக்கின்ற எந்த ஒரு விஷயமும் அதிகரிக்கவும் செய்யாது, குறையவும் செய்யாது என்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை நம்மால் கற்பனை செய்வது கூட கடினம். நம்மிடம்

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

பத்தாயிரம் ரூபாய் இருப்பதாக வைத்துக் கொள்வோம் அதோடு 2000 சேர்த்தால் அது 12,000–மாகும். ரூ.2000 எடுத்து செலவு செய்தால் எட்டாயிரமாக குறையும். 3 மடங்கு பெருகினால் 30,000 –மாகும். நாலு பேருக்கு சமமாக பிரித்துக் கொடுத்தால் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் 2500 தான் கிடைக்கும். ஆக பணம் என்று எடுத்துக் கொண்டால் இப்படி அது கூடுவதையும் குறைவதையும் நாம் கண்ணால் பார்க்கிறோம். நம்முடைய அறிவை எடுத்துக் கொண்டால் +2 படித்த மாணவன் ஒருவன் கல்லூரிக்கு மேற்படிப்புக்குச் சென்றான் என்றால் அவன் அறிவு வளரும். ஆனால் அதே சமயத்தில் தன்னுடைய அறிவை நாலு பேரோடு பகிர்ந்து கொண்டான் என்றால் அதனால் அது குறையாது. நாலு பேரோடு நம்முடைய பணத்தை பகிர்ந்தால் அது குறைகிறது. ஆனால் எத்தனை பேரோடு நம்முடைய அறிவை பகிர்ந்தாலும் அது குறையாது. அதாவது நம்முடைய அறிவு என்பது பணத்தை விட **infinite** தன்மை அதிகம் கொண்டதாக இருக்கிறது. இப்படி அறிவை கூட்டினால் அது வளர்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்படி எவ்வளவு தான் கூட்டினாலும் நம்மால் அதனுடைய அளவை அதிகரிக்க முடியாது என்ற நிலையில் ஒன்று இருக்கிறது என்றால் அதை நம்மால் புரிந்து கொள்ள முடியுமா? அது தான் **Infinity.** இப்படிப்பட்ட **infinite** நிலையில் இறைவன் ஒருவன் தான் இருக்கிறான். இறை ஜீவியத்தை நம்மால் கூட்டவும் முடியாது, குறைக்கவும் முடியாது, பெருக்கவும் முடியாது, வகுக்கவும் முடியாது. இப்படிப்பட்ட சிறப்பு கொண்ட வேறு எந்த விஷயத்தையும் நம்முடைய பூவுலகிலோ, இயற்கையிலோ சமூகத்திலோ அல்லது நம்முடைய அன்றாட வாழ்க்கையிலோ நம்மால் பார்க்க முடிவதில்லை என்பதால் **Infinity**-யினுடைய இப்படிப்பட்ட சிறப்பம்சத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது.

ஆனால் பகவான் மற்றும் அன்னையும் என்ன சொல்கிறார்கள் என்றால் ஆன்மா **infinite** ஆகவும் வரம்பற்றதாகவும் இருக்கிறது என்கிறார்கள். அதாவது அளவிலும் சரி அதனுடைய ஆற்றலிலும் சரி அது அளவு கடந்ததாகத்தான் இருக்கிறது. இந்த அளவுகடந்த தன்மை என்பது ஆன்மாவினுடைய முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாகும். சச்சிதானந்தம் என்பது ஒரு உயர்ந்த ஆன்மீக நிலை. சச்சிதானந்தத்தில் மூன்றாவது அம்சமாக இருப்பது ஆனந்தம். இந்த ஆனந்தம் எப்படி வந்திருக்கிறது என்பதற்கு பகவான் விளக்கம் கொடுத்திருக்கிறார். ஆன்மாவினுடைய வரம்பற்ற நிலை எதற்கும் கட்டுப்படாத ஒரு வரம்பற்ற சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது என்று சொல்கிறார். அந்த சுதந்திரம்தான் அந்த ஆனந்தத்தை வழங்கியிருக்கிறது என்று சொல்கிறார். அவர் சொல்வதைப் பார்த்தால் **Infinite-**னுடைய **objective expression** அதாவது வெளி வெளிப்பாடு சுதந்திரமாகவும் அதே சமயத்தில் **subjective expression** அதாவது உள் வெளிப்பாடு ஆனந்தமாகவும் தெரிகிறது என்கிறார்**.**

அளவுகடந்த சுதந்திரம் ஏன் அளவு கடந்த ஆனந்தத்தை தருகிறது என்று புரிந்துகொள்ள வேண்டுமென்றால் நம்முடைய சுதந்திரம் எந்த நிலையில் இருக்கிறது, அதனால் நம் சந்தோஷம் எந்த அளவிற்கு பாதிக்கப்படுகிறது என்பதை இறைவனுடைய சுதந்திரத்தோடும், சந்தோஷத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் தான் தெரியும். பூவுலகில் பிறக்கின்ற எந்த ஒரு மனிதனுக்கும் முழு சுதந்திரம் கிடையாது. அவன் பிறந்த நாள் முதல் கண்ணை மூடும் இறுதி நாள் வரையிலும் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும். இந்த எண்ணற்ற கட்டுப்பாடுகளும், வரம்புகளும் நம்முடைய சுதந்திரத்தை பெருமளவு குறைத்து விடுகின்றன. நம்முடைய உடம்பின் தேவைகளை நாம் மீறி நடக்க முடியாது. நேரத்திற்கு சாப்பிடாவிட்டால் நாம் வேலை செய்வதற்கு உடம்பில் தெம்பிருக்காது. சிறுவர், சிறுமியராய் இருக்கின்ற அந்தப் பள்ளிப் பருவத்தில் அவர்கள் இஷ்டம் போல விளையாடிக் கொண்டிருக்க முடியாது. தினமும் பள்ளிக்கு செல்ல வேண்டும் என்று குடும்பமும் சமூகமும் நிர்ப்பந்தப்படுத்துகிறது. 20 வயதிற்கு மேல் ஆகிவிட்டால் ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி அந்த வயதிற்கு உண்டான பல்வேறு நிர்பந்தங்களை சமூகம் திணிக்கிறது. ஆணாக இருந்தால் அவன் ஒரு வேலை தேடிக் கொண்டு உழைத்து சம்பாதிக்க வேண்டும். வேலை செய்ய இஷ்டமில்லை, சும்மா இருக்க விரும்புகிறேன் என்று சொன்னாலும் சமூகம் அவரை சும்மா விடுவதில்லை. ஆனால் ஆண்டவனை இப்படி யாரும் நிர்பந்தப்படுத்த முடியாது. அவர் இஷ்டப்பட்டால் வேலை செய்வார் இல்லாவிட்டால் அவர் அமைதியாக இருப்பார் அவரை கேள்வி கேட்பதற்கு யாருமில்லை. ஆண்களுக்கு இருக்கின்ற சொற்ப சுதந்திரம் கூட பெண்களுக்குக் கிடையாது. பெண்கள் விரும்புகிறார்களோ இல்லையோ கல்யாண வயதை எட்டிவிட்டால் அவர்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டுதான் ஆக வேண்டும் என்ற இடத்தில் சமூகம் அவர்களை வைத்திருக்கிறது. திருமண வாழ்க்கையில் எனக்கு நாட்டமில்லை, ஆன்மீகத்தில் தான் ஈடுபாடு இருக்கிறது என்று சொல்லும் பெண்களை, அப்பெண்களின் குடும்பத்தார் சுதந்திரமாக செயல்பட விடுவதில்லை. ஆகப் பெண் என்றால் திருமணமாகி, ஓரிரு குழந்தைகளுக்குத் தாயாகி அதற்குப்பிறகு பேரப்பிள்ளைகளைப் பார்த்து விட்டுத்தான் கண்ணை மூட வேண்டும் என்ற பெரிய கட்டுப்பாட்டிற்குள் தான் பெண்கள் சமுதாயம் இருக்கிறது.

திருமணம் ஒரு பெரிய கட்டுப்பாடு என்றால், வருமானம் அது தனக்கே உண்டான பல்வேறு கட்டுப்பாடுகளை நம்மேல் திணிக்கிறது. தான் விரும்புகின்ற வருமானத்தை பார்ப்பவர்களே மிகவும் குறைவு. மனதில் இலட்ச ரூபாய் வருமானம் இருக்கும்பொழுது கையில் 10,000 அல்லது 15,000 வருமானத்தை பார்ப்பவர்கள் தான் அதிகம். தான் ஆசைப்படுகின்ற

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

வருமானம் கிடைக்காதபட்சத்தில் தான் விரும்புகின்ற மாதிரியெல்லாம் செலவு செய்ய எவராலும் முடியாது. தனக்கு என்ன வருமானமோ அதற்குண்டான செலவைத் தான் ஒருவரால் செய்து கொள்ள முடியும். கார் வைத்துக் கொள்ள ஆசையாக உள்ளது, ஆனால் இருக்கின்ற வருமானத்தில் **two wheeler** தான் வைத்துக் கொள்ள முடியும் என்றால் அப்படிப்பட்ட நிலையில் உள்ள மனிதர் காரை மறந்து விட்டு **two wheeler**-ல் தான் போகப் பழகிக் கொள்ள வேண்டும்.

திருமணம் சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது, வருமானம் சில நிர்ப்பந்தங்களை திணிக்கிறது என்றால், குடும்ப வாழ்க்கையும் சமூக வாழ்க்கையும் மேலும் சில நிர்ப்பந்தங்களை விதிக்கின்றன. பிள்ளைகளாக இருந்தால் பெற்றோர்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். இளம் பிள்ளைகள் அவர்கள் இஷ்டப்படி எல்லாம் பெற்றோருக்கு அடங்கியிருக்காமல் செயல்பட முடியாது. திருமணமான பல பெண்கள் கணவனுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் குடும்பம் நடத்த முடியும். அவர்கள் இஷ்டப்படியெல்லாம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியாது. வேலை செய்கின்ற ஒரு ஆண்மகனுக்கு அவனுக்கு மேல் ஒரு மேலதிகாரி இருந்தால் அவர் சொல்லுகின்றபடிதான் வேலை செய்ய வேண்டுமே ஒழிய, இவர் இஷ்டப்படி வேலை செய்ய முடியாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களையும் குடிமக்களால் மீறவும் முடியாது **licence** வாங்காமல் வண்டி ஓட்ட முடியாது, கட்ட வேண்டிய வரிகளை கட்டாமல் இருக்க முடியாது, **Town Planning Authority**-ஐ மீறி நம் இஷ்டத்திற்கு வீடு கட்டிக் கொள்ள முடியாது. **Traffic** விதிமுறைகளை மதிக்காமல் நம் இஷ்டம் போல் வாகனம் ஓட்டவும் முடியாது. இப்படி குடும்பம், சமூகம், வேலை, வருமானம், அரசாங்கம் என்று எல்லாம் ஒன்று சேர்ந்து பல்வேறு நிர்ப்பந்தங்களை உண்டுபண்ணி அவரவருக்கு இருக்கின்ற சுதந்திரத்தை பெருமளவு குறைத்து விடுகின்றன. சுதந்திரம் எந்த அளவு குறைகிறதோ அந்த அளவு நம் சந்தோஷம் குறைந்து விடுகிறது. விளையாட விரும்புகின்ற பிள்ளைகளை **home work** போடச் சொன்னால் அவர்களுக்கு வருத்தம் வருகிறது. அதிக வருமானம் பார்க்க விரும்புகிறவருக்கு குறைந்த வருமானம் வரும்பொழுது அவர் சுருங்கிப் போகிறார். தனக்குப் பிடிக்காத வேலையை மேலதிகாரி செய்யச் சொன்னால் அந்த இடத்தில் சங்கடம் வருகிறது. நிறைய வருமானம் பார்க்கிறவர்களை அதற்கேற்றபடி வருமானவரி கட்டச் சொன்னால் அவர்கள் அழுகிறார்கள்.

ஆனால் இப்படி நினைத்துப் பாருங்கள். யாருக்கும் எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த நிர்ப்பந்தமும் இல்லை, இஷ்டம் போல இருக்கலாம், யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. இப்படி ஒரு பூரண சுதந்திரம் நமக்குக் கிடைத்தால் நாம் எவ்வளவு சந்தோஷமாக இருப்போம் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வேலை செய்கிறோமோ இல்லையோ வேண்டிய வருமானம் கிடைக்கும். யாரும் எதற்கும் நம்மை எந்த கேள்வியும் கேட்க மாட்டார்கள். இஷ்டப்பட்டால் வேலை செய்யலாம். விரும்பினால் திருமணம், இல்லாவிட்டால் சுதந்திர பறவையாக இருக்கலாம். வரி கட்டாமலோ, லைசன்ஸ் வாங்காமலோ, விதிமுறைகளை பின்பற்றாமல் இருந்தாலோ எவரும் கேட்க மாட்டார்கள் என்று இப்படி ஒரு சுதந்திரம் நமக்குக் கிடைத்தது என்றால் நாம் எப்படி மலர்ந்து போவாம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் ஒரே ஒரு நாள் இப்படி ஒரு சுதந்திரத்தை அனுபவித்தாலும் நாம் வாழ்நாள் முழுவதும் அதை நினைவில் வைத்திருப்போம். ஆனால் ஒரு நாள் கூட இப்படி இருப்பதற்கு சமூகம் எவரையும் அனுமதிப்பதில்லை, அதனால் மனிதன் சுருங்கிப் போய் இருக்கிறான். இறைவனுக்கு இப்படி எந்த நிர்ப்பந்தமும் இல்லை என்பதால் அவர் எந்நேரமும் இந்த வரம்பற்ற சுதந்திரத்தின் காரணமாக பேரானந்தத்தில் இருக்கிறார்.

ஆன்மாவினுடைய வரம்பற்ற தன்மை சத்திய ஜீவிய அளவில் தெளிவாக வெளிப்படுகிறது. ஏனென்றால் சத்திய ஜீவிய நிலையே பகவானால் ஆங்கிலத்தில் **Infinite Truth Consciousness** என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. சத்திய ஜீவியத்திற்கு கீழே படிப்படியாக இறங்கி வந்தால் அடுத்தடுத்து கீழே உள்ள நிலைகள் இந்த **Infinity**-ஐ சத்திய ஜீவியத்தை விட குறைந்த அளவிலேயே வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக சத்திய ஜீவியத்திற்கு அடுத்த கீழ் நிலையில் உள்ளது **Overmind** ஆகும். நாம் வழிபடுகின்ற பெருங்கடவுள்கள் பரம சிவன், மகா விஷ்ணு, கிருஷ்ண பகவான் ஆகியோர் இந்த நிலையில் தான் இருக்கிறார்கள். சத்திய ஜீவியத்திற்குண்டான முழுமையான அறிவோ மற்றும் அதே அளவிற்கான **Infinite Nature** இவர்களுக்கு இல்லை. ஆனால் **Overmind**-க்கு கீழேயுள்ள **Human mind** உடன் ஒப்பிடும்பொழுது **Overmind**-னினுடைய **capacity for infinity** அதிகம். நம் கண்ணிற்கு நம் கண் பார்வை எட்டும் அளவிற்குத்தான் வெளி உலகம் தெரியும். ஆனால் மகாபாரதத்தில் நாம் என்ன கேள்விப்படுகிறோம் என்றால் கிருஷ்ண பகவான் விஸ்வரூபம் எடுத்தபொழுது பிரபஞ்சமே அந்த விஸ்வரூபத்திற்குள் அடங்கியிருந்ததை அர்ஜுனனும் மற்றும் குருஷேத்திர போர்க்களத்தில் குழுமியிருந்த அனைத்து போர் வீரர்களும் பார்த்தார்கள். இப்படி உலகம் முழுவதும் நம் கண் பார்வைக்கு தெரிவதற்கு வாய்ப்பேயில்லை. நாம் நம் வீட்டு மாடியில் நின்று வெளியில் பார்த்தால் நம் தெருவில் உள்ள மற்ற கட்டிடங்கள் நம் கண்ணில் படலாம். ஆனால் அடுத்த தெருவில் உள்ள கட்டிடங்களோ அல்லது அதற்கும் அடுத்த தெருவில் உள்ள கட்டிடங்கள் நம் கண்ணில் படுமா என்பது சந்தேகம். கடவுளான கிருஷ்ண பகவானுடைய பார்வை வரம்பற்றது. மனிதனான நம் பார்வை மிகவும் குறுகியது. இம்மாதிரியே

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

**Human mind-**ஐ எடுத்துக் கொண்டால் **Overmind-**க்குக் கீழே இருக்கிறது. ஆனால் **vital plane** என்று சொல்லப்படுகின்ற உணர்வு நிலைக்கு மேலே இருக்கிறது. **Overmind** உடன் ஒப்பிடும்பொழுது இதனுடைய **capacity for infinity** குறைவு. அதாவது கடவுள்களுக்கு இருக்கின்ற முழுமையான அறிவு மனிதனுக்கு இல்லை. அவனுடைய தேவைக்கு ஏற்ற அறிவு தான் அவனுக்குள்ளது. அதாவது பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே இருந்த அரசாங்க தகராறை எப்படி தீர்ப்பது மற்றும் அந்த குருக்ஷேத்திர போரை எப்படி நடத்துவது என்று கிருஷ்ண பகவானுக்கு இருந்த அறிவு பாண்டவரில் மூத்தவரான தர்மபுத்திரருக்கு இல்லை. கிருஷ்ண பகவான் தர்மபுத்திரரிடம் சொல்கிறார், "எனக்குத் தெரிந்த பஞ்சாங்கத்தின்படி 12 வருட வனவாசத்தை 12 நாளில் முடித்துக் கொள்ளலாம். சம்மதமா? "என்று கேட்கிறார். ஆனால் தர்மபுத்திரரோ அலறி "அதெப்படி 12 வருடங்களை 12 நாளில் கழிப்பது, உங்கள் பஞ்சாங்கம் எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரிந்த வகையில் 12 வருட வனவாசத்தை அதற்குரிய அளவிற்கு நான் அனுபவிக்கிறேன்" என்று பதிலளித்தார். தெய்வத்தினுடைய வரம்பற்ற பார்வைக்கும் மனிதனுடைய குறுகிய பார்வைக்கும் இப்படி மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போல் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இப்படி **Overmind** உடன் ஒப்பிடும்பொழுது மானிட அறிவின் **capacity for infinity** குறைவு. ஆனால் அதே சமயத்தில் நம்முடைய அறிவிற்கும் கீழேயுள்ள உணர்வு நிலை அதாவது **vital plane** உடன் ஒப்பிடும்பொழுது **Human mind-**னினுடைய **capacity for infinity** அதிகம். அறிவு வளர்ச்சியில்லாமல் வெறும் உடம்பையும் உணர்வுகளையும் வைத்துக் கொண்டு விவசாயம் மற்றும் வியாபாரம் மற்றும் போரிடுதல் என்று இவற்றை மற்றும் செய்து கொண்டு வாழ்ந்த மனிதன் சாதித்ததை விட விஞ்ஞானம் மற்றும் **technology** வளர்ந்தபின்பு நாகரீக வளர்ச்சியடைந்த மானிட இனம் சாதித்தது மிகவும் அதிகம். இம்மாதிரியே நம் அறிவுக்கு கீழ் உள்ள உணர்வு நிலையை எடுத்துக் கொண்டால் நம் அறிவினுடைய **capacity for infinity-**ஐ விட இதனுடைய **capacity for infinity** குறைவு. அதே சமயத்தில் நம்முடைய உடம்போடு ஒப்பிடும்பொழுது இதனுடைய **capacity for infinity** அதிகம். தன்னுடைய உடம்பையும் மற்றும் தன்னுடைய இரு கைகளை மட்டுமே கருவிகளாகக் கொண்டு மிருகங்களை வேட்டையாடியும், தானியங்கள் மற்றும் பழங்கள் காய்கறிகள் ஆகியவற்றை சேகரித்தும் சாப்பிட்டு வாழ்ந்த காட்டு மனிதனை விட உணர்வு மையத்தை வளர்த்துக் கொண்ட பெரிய அறிவு வளர்ச்சி இல்லையென்றாலும் விவசாயம் மற்றும் வியாபரத்தை செய்து உணர்வு நிலையில் வாழ்ந்த மனிதன் சாதித்தது அதிகம். உடம்போடு ஒப்பிடும்பொழுது உணர்வின் ஆற்றல் அதிகமாக தெரிகிறது. ஆனால் அறிவோடு ஒப்பிடும்பொழுது உணர்வின் ஆற்றல் குறைவு. ஏனென்றால் அறிவின் பார்வை அகன்றது. உணர்வின் பார்வை குறுகியது. ஆத்திரக்காரனுக்கும் ஆசை கொண்டவனுக்கும் அறிவு மட்டு என்பார்கள். அவனுக்கு அவனுடைய ஆத்திரமும், ஆசையும் தான் தெரியுமே ஒழிய அந்த நேரம் அறிவு வேலை செய்யாது. ஆகையால் ஆசையாலும், ஆத்திரத்தாலும் உந்தப்பட்டு செயல்படுபவன் அறிவால் செயல்படுபவனிடம் என்றுமே தோற்றுப் போவான். உதாரணமாக இரண்டாம் உலகப்போரை பெரிய சாம்ராஜ்யம் நிறுவ வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு ஹிட்லரும், முசோலினியும் **France, England,** மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் மேல் போர் தொடுத்து துவக்கினர். ஆரம்பத்தில் வெற்றி கிட்டினாலும் அமெரிக்காவினுடைய பணபலம் மற்றும் படை பலம் இவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் போய்விட்டது. இந்த பணபலத்தையும் படை பலத்தையும் அமெரிக்காவும் மற்றும் நேச நாடுகளும் ஜெர்மனி மற்றும் இத்தாலி மற்றும் ஜப்பானுக்கு எதிராக பயன்படுத்தியபொழுது மூன்று நாடுகளும் படுதோல்வியடைந்தன. ஜெர்மனி இரண்டு துண்டாகியது. ஜப்பானில் அணுகுண்டு வெடித்தது. ஏன் இந்த போரில் இறங்கினோம் என்று ஜெர்மானியர்களும் இத்தாலியர்களும் மற்றும் ஜப்பானியர்களும் பல வருடங்களாக வருத்தப்பட்டார்கள். அறிவின் வரம்பற்ற ஆற்றலோடு உணர்வு மற்றும் உடம்பு நிலையில் செயல்படுகின்றவர்களுடைய வரம்பிற்குட்பட்ட ஆற்றல் மோதும்பொழுது இப்படி படுமோசமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கிறது.

இறுதியாக நாம் **physical plane-**க்கு வருகிறோம். இருப்பதிலேயே மிகவும் ஆற்றல் குறைந்த **plane** என்பதால் இதனுடைய **capacity for infinity-**யும் அந்தளவு குறைவாகத் தான் இருக்கிறது. குறைவாக இருந்தாலும் **physical Infinity** கூட நமக்கு பிரம்மாண்டமாகத் தான் தெரிகிறது. உதாரணமாக எந்த **telescope-**ஆலும் பிரபஞ்சத்தின் எல்லையை பார்க்க முடியாத அளவிற்கு பிரபஞ்சம் பிரம்மாண்டமாக இருக்கிறது. பகவான் பிரபஞ்சத்தை முடிவில்லாத **finite** என்கிறார். பிரபஞ்சத்தின் அளவிற்கு வரம்பு கிடையாது என்பதை போல **physical plane-**ல் காலத்தின் வெளிப்பாட்டிற்கும் அளவு கிடையாது. காலத்தையும் பகவான் **Time Eternity** என்றும் **Timeless Eternity** என்றும் இரண்டாக பிரிக்கிறார்.

இம்மாதிரி பிரபஞ்சத்தின் அளவு மற்றும் வயது என்று இவற்றை தவிர **physical plane-**ல் வேறு எதை எடுத்துக் கொண்டாலும் எல்லாமே வரம்பிற்குட்பட்டவையாகவே இருக்கும். பூமியின் இயற்கை வளத்தை எடுத்துக் கொண்டால் அதற்கு ஒரு லிமிட் உண்டு. பூமிக்கு அடியில் இருந்து நாம் நிலக்கரி மற்றும் எண்ணெயை எடுத்து செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

இவை தீராமல் எப்போதுமே கிடைத்துக் கொண்டிருக்குமென்று சொல்ல முடியாது. இப்பொழுது நாம் இவற்றைப் பயன்படுத்தும் அளவிற்கு தொடர்ந்து பயன்படுத்தினோம் என்றால் இவை இன்னும் 100 வருடம் தான் நீடிக்கும் அதற்கு மேல் நீடிக்காது என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். மனிதனுடைய சம்பாத்தியம் மற்றும் சொத்து ஆகியவற்றிற்கும் அளவுண்டு. **Bill Gates** போன்ற கோடீஸ்வரர்களுடைய **Asset figure-**ஐ எடுத்துக் கொண்டால் கூட அதிகபட்சமாக **50 billion dollars** என்று சொல்கிறார்கள். ஒரு பில்லியன் என்றால் 4500 கோடியாகும். 50 பில்லியன் என்றால் 2,25,000 கோடி ரூபாயாகும். உலகத்தினுடைய மொத்த **financial assets-** ஐ எடுத்துக் கொண்டால்கூட, 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாத கணக்கெடுப்பின்படி பார்த்தால் சுமார் **195 Trillion dollars** என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ஒரு **Trillion** என்றால் 1000 **billion** ஆகும். ஆகவே 195 **trillion** என்றால் 1,95,000 பில்லியன் என்றாகும். இந்த எண்ணிக்கை நமக்கு பிரமிப்பாக இருந்தாலும் இது ஒரு அளவிற்குள் தான் வருகிறது. மனிதனுடைய ஆயுளை எடுத்துக் கொண்டால் கூட 100 வயதிற்கு மேல் பொதுவாக இருப்பதில்லை. ஓய்வெடுக்காமல் எந்த மனிதனாலும் நாள்கணக்காக வேலை செய்ய முடியாது. பெரும்பாலானவர்கள் 8 மணி நேர வேலைக்குப் பிறகு களைத்துப் போய் ஓய்வெடுக்க வேண்டும் என்ற நிலையில் தான் இருக்கிறார்கள். உடம்பினுடைய **capacity for Infinity** எவ்வளவு குறைவு என்பது அறிவினுடைய **capacity**யை ஒப்பிட்டுப் பார்த்தால் தான் நமக்குத் தெளிவாகத் தெரியும். உதாரணமாக படிப்பில்லாமல் **unskilled** வேலை செய்கின்ற தொழிலாளர்களை எடுத்துக் கொண்டோம் என்றால் அவர்கள் அதிகபட்சமாக ஒரு நாளைக்கு 250 – 300 ரூபாய் தான் சம்பாதிக்கிறார்கள். ஒரு நாள் வருமானத்தை 250 ரூபாயாக வைத்தால் நான்கு ஞாயிறு போக ஒரு மாதத்தில் 26 நாட்கள் வேலை செய்தால் ஒரு மாத வருமானம் 6500 ரூபாய் அல்லது 7800 தான் வருகின்றது. ஆனால் அறிவை நம்பி உழைக்கின்றவர்களைப் பார்த்தால் அது மிக உயர்ந்த அளவில் இருக்கும். அமெரிக்காவில் இருக்கின்ற **Tom Peters** மற்றும் **Peter Drucker** போன்ற **management** நிபுணர்களுடைய ஒரு நாள் சம்பளத்தை எடுத்துக் கொண்டோம் என்றாலும் அது 80,000 டாலர்கள் மற்றும் **1** இலட்சம் டாலர்கள் அளவில் இருக்கிறது. இந்திய ரூபாயில் பார்த்தால் ஒரு நாள் வருமானம் ரூ. 36,00,000 முதல் ரூபாய் 45,00,000 வரை என்றாகிறது. அறிவில்லாத தினக்கூலிக்கு அவனுடைய உடல் உழைப்பு தருவது வெறும் 250 ரூபாய் தான். **Management** துறையில் தம்முடைய அறிவு பலத்தால் முதன்மை இடத்தில் நிற்பவருக்கு, அவருடைய அறிவு வழங்கும் தினசரி வருமானம் ரூ. 36,00,000 முதல் ரூபாய் 45,00,000. இந்த வருமானம் சம்பந்தப்பட்ட **figure-**ஐ வைத்துக் கொண்டே உடம்பின் ஆற்றல் என்ன அறிவின் ஆற்றல் என்ன என்று நாம் புரிந்து கொள்ளலாம்.

முன்னணியில் இருக்கின்ற டாக்டர்கள், வழக்கறிஞர்கள், ஆடிட்டர்கள் **corporate CEO-** க்கள் என்று இவர்கள் எல்லோரும் உடல் உழைப்புக்கு பதிலாக அறிவைப் பயன்படுத்தி சம்பாதிக்கின்றவர்கள். இவர்களுடைய மாத வருமானத்தை எடுத்துக் கொண்டால் கூட குறைந்த பட்சம் சில இலட்சங்கள் இருக்கும் அதிகபட்சமாக வருடாந்திர வருமானம் ஒரு கோடியாக கூட இருக்கும். வெறும் உடல் உழைப்பால் கிடைக்கின்ற மாத வருமானமான ரூ 6,500 அல்லது ரூ. 7800 மற்றும் வருட வருமானமான ரூ. 78.000 அல்லது 93,600– உடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சில இலட்சங்களும், ஒரு கோடியும் பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

இப்படிப்பட்ட வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நாம் தாண்டி வராமல் நம் வாழ்க்கையை நாம் உயர்த்திக் கொள்ள முடியாது. **Physical plane** வரையறைக்கு உட்பட்டது என்றாலும் **vital plane** மற்றும் **mental plane** ஆகியவற்றிற்க்கு கட்டுப்பட்டு ஒத்துழைக்கும் அளவிற்கு அதற்கும் ஒரு வரம்பற்ற தன்மை பிறக்கிறது. ஒரு மனிதன் எந்த ஈடுபாடும் அக்கறையும் இல்லாமல் வேலையை மெக்கானிக்கலாக வெறும் உடல் சக்தியை மட்டும் பயன்படுத்தி செய்யும்பொழுது அவருக்கு விரைவில் களைப்பு வந்துவிடுகிறது. அதனால் 8 மணி நேரத்திற்கு மேலும் அந்த வேலையை செய்ய வேண்டும் என்றால் கட்டாயப்படுத்தித்தான் அந்த வேலையை வாங்க முடியும். ஆனால் அதே உடல் வேலையை ஒரு ஈடுபாட்டுடன் செய்யும்பொழுது அவருடைய உணர்வு மையத்தினுடைய ஈடுபாடு அந்த வேலையில் சேர்ந்துகொள்கிறது. அதனால் அவருடைய வழக்கமான உடல் தெம்போடு அவருடைய உணர்வு மையம் வழங்கக் கூடிய கூடுதல் எனர்ஜியும் அவருக்கு கிடைக்கிறது. அந்தக் கூடுதல் எனர்ஜியோடு வேலை செய்யும்பொழுது வழக்கமாக வருகின்ற களைப்பு வராமல் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்ய முடிகிறது. ஒரு கம்பெனிக்கு ஒரு பெரிய ஆர்டர் வந்துள்ளதாகவும் அதை நிறைவேற்றிக் கொடுத்தால் கம்பெனிக்கு பெரிய வருமானம் கிடைக்கும் என்றும் ஆனால் 3 அல்லது 4 நாட்களிலேயே ஆர்டரை முடித்துக் கொடுக்கவேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். ஆர்டரை நிறைவேற்றினால் பெரிய வருமானம் கிடைக்கும் என்று தெரியும்பொழுது அவர்களுக்கு பெரிய மகிழ்ச்சி பிறக்கிறது. அந்த மகிழ்ச்சி நேரம், காலம் பார்க்காமல் வேலை செய்யக்கூடிய ஒரு உடல் தெம்பை அவர்களுக்கு கொடுக்கிறது. அந்த தெம்பை வைத்துக் கொண்டு **day shift** மற்றும் **night shift** என்று மாறிமாறி ஓய்வெடுக்காமல் தொடர்ந்து அந்த மூன்று நான்கு நாட்கள் வேலை செய்து அந்த ஆர்டரை அவர்களால் நிறைவேற்றிக் கொடுக்க முடிகிறது. இப்படி ஒரு பெரிய வருமானம் அதனால் கிடைக்கின்ற பெரிய மகிழ்ச்சி என்று இவைகளினுடைய **support**

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**

இல்லாமல் வேலையை வெறும் வேலையாக செய்யச் சொல்லி ஓய்வெடுக்காமல் இந்த கம்பெனி ஊழியர்களை மாறி மாறி **day shift** மற்றும் **night shift** –க்கு வரச் சொன்னால் அவர்கள் அப்படி ஆர்வமாக வேலைக்கு வருவது சந்தேகம். அவர்களுடைய உடம்பினுடைய அளவுக்குட்பட்ட **physical** எனர்ஜியை அளவற்ற எனர்ஜியாக மாற்றுவது அவர்களுடைய உணர்வு மையத்தில் இருந்து பிறக்கின்ற மகிழ்ச்சி வழங்கிய அளவுகடந்த **vital** எனர்ஜியாகும். தேர்தல் சமயங்களில் அரசியல் தலைவர்கள் நேரம் காலம் பார்க்காமல் சரியாக தூக்கம் இல்லாமல் சாப்பாடு இல்லாமல் மாநிலம் முழுவதும் மற்றும் அகில இந்தியா முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்ய பயணம் செய்வதைப் பார்க்கிறோம். 70 வயது கடந்த அரசியல் தலைவர்கள் கூட இப்படி ஓய்வில்லாமல் பிரச்சார வேலையில் ஈடுபடுவதும் உண்டு. 70 வயதைக் கடந்தவருக்கு பொதுவாக இந்த எனர்ஜி இருக்காது. ஆனால் தேர்தலில் கட்சிக்கு வெற்றி கிடைக்கும் என்ற ஆவலும் எதிர்பார்ப்பும் இருக்கும்பொழுது, அந்த முதிய வயதிற்கு உண்டான தளர்ச்சியையும் மீறி பிரச்சார வேலையை செய்யும் அளவில் அவர்களுடைய உணர்வு மையம் அவர்களுக்கு எனர்ஜியை வழங்குகிறது. இம்மாதிரியே போருக்குச் செல்கின்ற படை வீரர்கள், காடு, மலை, பாறை, பாலைவனம் என்று **exploration-**க்கு போகின்றவர்கள். மற்றும் **international competitive game-**க்கு விளையாடச் செல்கின்ற வீரர்கள் இவர்கள் எல்லாம் களைப்பே தெரியாமல் அவரவர்களுக்குண்டான பணிகளை செய்வதே அவர்களுடைய இயற்கையான உடல் தெம்பிற்கு பதிலாக. அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற வேலையில் இருக்கின்ற ஈடுபாட்டிலிருந்து பிறக்கின்ற அளவு கடந்த எனர்ஜி அவர்கள் உடம்பை இயக்குவதால் தான்.

இம்மாதிரியே நம்முடைய அறிவின் ஆதிக்கதின் கீழ் நம்முடைய உடம்பு செயல்படும்போதும் நம் உடம்பின் ஆற்றலும் **physical plane-**னுடைய ஆற்றலும் அளவு கடந்து பெருகிறது. வெறும் கைகளை மட்டும் வைத்துக் கொண்டு நாம் வேலை செய்யும்பொழுது நம்முடை உற்பத்தித் திறன் மிகவும் குறைவு. ஆனால் **machine-**கள் நம் அறிவால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள் ஆகும். **Machine** களை வைத்துக்கொண்டு மனிதன் **factory-**இல் வேலை செய்யும்பொழுது **factory** உற்பத்தி அபாரமாக அதிகரிக்கிறது. இதே ரீதியில் பார்க்கப்போனால் நம் அறிவைவிட அதிக சக்தி வாய்ந்தது நம்முடைய ஆன்மாவாகும். அப்படி என்றால் இந்த ஆன்மாவின் ஆதிக்கத்தின் கீழ் நம்முடைய உடம்பு செயல்பட முன் வந்தால் அதனுடைய உற்பத்தித் திறன் எந்த அளவிற்கு அதிகரிக்கும் என்பதை நாம் கற்பனை செய்ய வேண்டும். தன்னுடைய உடம்பு, உணர்வு, அறிவு ஆகிய மூன்றும் கொடுக்கின்ற எனர்ஜி மற்றும் ஆற்றலை வைத்துக் கொண்டு வேலை செய்கின்ற ஒருவர் மாதம் ரூபாய் 20,000 தான் சம்பாதிக்கிறார் என்றால் ஆன்மீகப் பண்புகளான பக்தி, நம்பிக்கை மற்றும் சமர்ப்பணம் மற்றும் மௌன சக்தி என்ற இவை கொடுக்கும் பலத்தை வைத்துக் கொண்டு செயல்பட முன்வந்தார் என்றால் அதே ரூ. 20,000 என்பது மாதம் ரூபாய் 2 இலட்சம் ஆகவும் ரூ. 2 கோடியாகவும் கூட உயர்வதைக் காணலாம். அதாவது வெறும் உடம்பு மட்டும் வேலை செய்வதால் குறைந்தபட்ச பலன்தான் கிடைக்கும். உணர்வும் அறிவும் கலந்து கொண்டால் சுமாரான பலன் கிடைக்கும். ஆனால் வரம்பில்லாத வளர்ச்சி மற்றும் முடிவில்லாத முன்னேற்றம் என்று இவற்றைப் பார்க்க வேண்டும் என்றால் நம் வாழ்க்கையில் ஆன்மாவை கொண்டு வர வேண்டும். இப்படி நம்முடைய ஆன்மாவின் ஆதிக்கத்தின் கீழ் நம்முடைய அறிவு, உணர்வு, உடம்பு என்று மூன்றும் செயல்பட முன்வந்தால் உலக மக்களுடைய வாழ்க்கைத் தரம் அதாவது **living standards** அடையாளம் தெரியாத அளவிற்கு உயர்ந்து போகும். அதாவது உலகத்தினுடைய ஐஸ்வரியம் அந்த அளவிற்குப் பெருகிவிடும். உயர்ந்தும் விடும்.

இப்படி நம்முடைய ஆன்மா நம் வாழ்க்கையில் செயல்பட்டு வரம்பற்ற முன்னேற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்றால் அது வெளிவருவதற்கு ஏற்றவாறு நம்முடைய அறிவு, உணர்வு மற்றும் நாம் செயல்படும் பாணி என்று இவை எல்லாவற்றையும் நாம் மாற்றி ஆக வேண்டும். நம்முடைய வழக்கமான செயல்பாடுகள் எல்லாம் நாம் **finite-** ஆக இருப்பதால் வருகின்ற செயல்பாடுகளாகும். ஆனால் நாம் **Infinite** ஆக மாறினால் நம்முடைய செயல்பாடுகள் எல்லாம் நேர் எதிராக இருக்கும். இப்பொழுது **finite**–இன் உடைய செயல்பாடுகளைப் பற்றி 10 கருத்துகளையும், அதற்கு நேர் எதிர்மாறான **Infinite-** இன் செயல்பாடுகள் என்று ஒரு 10 கருத்துகளையும் பட்டியலிட்டு வழங்க விரும்புகிறேன். பட்டியலையும் அதற்குண்டான விளக்கங்களையும் அடுத்த சொற்பொழிவில் வழங்குகிறேன்.

**N. Asokan**
**Secretary &Senior Research Fellow**